DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No.162/2020 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : விஜயகுமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் பழனி நகராட்சியில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் உடுமலைப்பேட்டை நகராட்சி பகுதியில் *2019-2025* வருடம் முதல் உணவு பாதுகாப்பு அலுவலகத்தில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணியில் இருந்தேன். 20.04.2012 ம் தேதியிட்ட அரசாணையின் படி உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிவதற்காக அரசாணை வெளியிட்டது. **அந்த அரசாணை அசா.ஆ 1 என குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அரசாணையின் படி உணவு பாதுகாப்பு படி உணவு மாதிரியை எடுக்கவும் ஆய்விற்கு அனுப்பவும் அதிகாரம் பெற்றுள்ளேன் கடந்த 02.03.2020 ம் தேதியன்று காலை 10.30 மணியளவில் எனது அன்றாட பணிக்காக உடுமலை நகராட்சிக்கு உட்பட்ட நியு பாண்டியன் சூப்பர் மார்கெட்டு கல்பனா ரோட்டில் உள்ள கடைக்கு சென்றேன். அப்போது அங்கிருந்த நபரிடம் என்னை அறிமுகம் செய்து கொண்டு பின்னர் அந்த நபரிடம்

கடையின் உரிமையாளர் பற்றி விசாரித்த போது அவர் நான் தான் கடையின் உரிமையாளர் என்று சொன்னார். பின்னர் உணவு பாதுகாப்பின் படி உரிமம் பெற்றுள்ளிர்களா என்று கேட்டேன் அவர் பெற்றுளளார் என்று சொன்னார் நான் வாங்கி அதை சரிபார்த்தேன். **அந்த உரிமம் நகல் அசா.ஆ .2 என குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் கடைக்கு ஆய்வு செய்து அங்கு விற்பனைக்கு வைத்ததிருந்து லூஸ்கண்டிசனனில் உள்ள வடகம் பொருளை சட்ட விதிகளுக்கு மீறி உள்ளதாக கருதி உணவு மாதிரியை எடுத்து அனுப்பலாமா என்று உரிமையாளிடம் தெரிவித்து அதற்கு அவர் சம்மதம் தெரிவித்தார். பின்னர் லூஸ் கண்டிசனனில் உள்ள வடகத்தை யாரிடம் இருந்து வாங்கினிர் என்று கேட்டதற்கு யார் என்று அவர் சொல்ல மறுத்துவிட்டார் பின்னர் அவரின் ஆதால் நகலை வாங்கி பார்த்தேன். **ஆதார் நகல் அசா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறது.**
3. பின்னர் பின்னர் அங்கிருந்த விஜயலிங்கம் த/பெ லிங்கபாண்டி ஜீவா நகர் உடுமலைப்பேட்டை என்பவரை உணவு மாதிரி எடுப்பது பற்றி கூறி உணவு மாதிரி எடுத்து முடிக்கும் வரை பொது சாட்சியாக இருக்கும் படி கேட்டதற்கு அவர் சம்மதம் தெரிவித்தார். அவரிடம் இருந்து ஆதார் அட்டை நகலை பெற்றுக் கொண்டே அந்த ஆதார் **அட்டை நகல் அசா.ஆ.4 என குறியீடு செய்யப்படுகிறது.**
4. பின்னர் கடையின் உரிமையாளருக்கு சாட்சியின் முன்னிலையில் வடிவம் V-A இரண்டு பிரதியை எடுத்து கடையின் உரிமையாளரிடம் உரிமையாளரிடம் சாட்சியிடமும் கையொப்பம் பெற்று அதில் ஒரு பிரதியினை கடையின் உரிமையாளரிடம் சார்வு செய்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த இரண்டு கிலோ வடகம் லூஸ் கண்டிஷன் ரூபாய் 80.00 க்கு விலை கொடுத்து வாங்கி அதற்கு ரொக்க ரசிது பெற்றுக் கொண்டேன். **படிவம் V-A அசா.ஆ.5 என்றும் ரொக்க ரசீது அசா.ஆ.6 என்றும் குறியீடு செய்யப்படுகிறது.**
5. பின்னர் விலைக்கு வாங்கிய வடகம் லூஸ் கண்டிசன் 2 கிலோவை 500 கிராம் வீதம் நான்கு சம பாகங்களாக தனித்தனியாக பிரித்து உணவு பாதுகாப்பு விதிகள் 2.4.1 இன் படி பார்சல் செய்து போர்டு எண் 247/495 மற்றும் வரிசை எண் 42/2019-2020 என்று குறிப்பிட்டு ஒவ்வொரு உணவு மாதிரி ஒன்று இரண்டு மூன்று நான்கு என குறியீடு செய்து உணவு பாதுகாப்பு தர விதிகள் படி நான்காவது உணவு மாதிரியே உரிமையாளரின் சொந்த செலவில் தேசிய உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகத்திற்கு அனுப்பி பரிசோதனை செய்து

கொள்ள விருப்பமா என்று கேட்டதற்கு உரிமையாளர் **மறுத்ததற்கான கடிதம்** பெற்றுக் கொண்டேன் மருத்துவத்துக்கான ஒப்பம் **பெற்றுக்கொண்ட ஆவணம் மறுத்ததற்கான கடிதம் அசா.ஆ.7 என்றும், விற்பனையாளர் ஒப்புதல் கடிதம் அசா.ஆ.8 என்றும் படிவம் 6 அசா.ஆ.9 என்றும் குறியீடு செய்யப்படுகிறது**

6. பின்னர் படிவம் 6 மாதிரி அலுவலக அரசு வைத்து அத்துடன் ஒன்றாவது உணவு மாதிரியே உரிய முறையில் பார்சல் செய்து அரக்கு செயலிட்டு ரெண்டு மூணு 2020 ஆம் தேதி அன்று உணவு பகுப்பாய்வு சென்னைக்கு பதிவு தபால் பார்சல் மூலம் அனுப்பி அதற்குண்டான ரசீதுடன் இணைத்தேன். **அரக்கு முத்திரை தாள் அசா.ஆ.10 என்றும், தபால் ரசீது அசா.ஆ.11 என்றும் குறியீடு செய்யப்படுகிறது.**
7. பின்னர் 02.03.2020 ரெண்டு மூணு 2020 ஆம் தேதி என்று உணவு மாதிரி எடுத்ததற்கான தகவலை பெற்று அந்த தகவலை நியமன அலுவலர் உணவு பாதுகாப்பு பிரிவு திருப்பூர் மாவட்டம் அவர்களுக்கு தெரிவித்து மீதமுள்ள மூன்று உணவு மாதிரிகளை உரிய படிவங்களுடன் தகுந்த முறையில் பார்சல் செய்து 02.03.2020 ரெண்டு மூணு 2020 ஆம் தேதி அன்று நியமன அலுவலரிடம் ஒப்படைத்து அதற்கான ஒப்புதல் பெற்றேன். **ஒப்பம் பெறப்பட்ட ஆவணம் அசா.ஆ.12 என்று குறியிடு செய்யப்படுகிறது.** உணவு மாதிரிக்காக எடுக்கப்பட்ட உணவு பகுப்பாய்வாளரின் அறிக்கை படிவம் அறிக்கையின் 1930 2019-20 ,17 3 3 200 நியமன அலுவலர் அவர்களுக்கு 19 3 2022 கிடைக்கப்பட்டு எனக்கு 24/3/2020 அன்று மேல் நடவடிக்கைக்காக என்னிடம் வழங்கப்பட்டது **பகுப்பாய்வு அறிக்கை அசா.ஆ.13 என குறியீடு செய்யப்படுகிறது.** தரம் குறைந்த மற்றும் பாதுகாப்பற்ற உணவு என்று சான்று அறிக்கை வழங்கப்பட்டது
8. பின்னர் ஆய்வறிக்கையை மேல்முறையீடு செய்வதற்கு ஏதுவாக பரிந்துரைக்கப்பட்ட ஆய்வகத்திற்கு அனுப்ப கடையின் உரிமையாளருக்கு நியமன அலுவலர் அவர்களால் அறிவிப்புடன் படிவம் பி நகலையும் இணைத்து பதிவு தபாலில் 24/3/2020 ஆம் தேதி அன்று அனுப்பினேன் . **படிவம் பி- ன் நகல் அசா.ஆ.14 என்றும் 24. 3. 2020 ஆம் தேதியிட்ட பதிவு தபால் ரசீது அசா.ஆ.15 என்றும் குறியீடு செய்யப்படுகிறது.**
9. பின்னர் 30 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்பட்டது. அவர் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. பின்னர் கடையின் உரிமையாளர் சுப்பிரமணியன் வழக்கு தொடர அனுமதி வேண்டி

நியமன அலுவலர் மூலமாக ஆவணங்களுடன் ஆணையாளர் ஆவணங்களுடன் ஆணையாளர் உணவு பாதுகாப்புத்துறை சென்னை அவர்களுக்கு பரிந்துரை கடிதம் அனுப்பப்பட்டது. **அந்த பரிந்துரை கடிதம் அசா.ஆ.16 என குறியீடு செய்யப்படுகிறது.** அதன்படி ஆணையாளர் உணவு பாதுகாப்பு துறை சென்னை அவர்கள் 10 9 20 ஆம் தேதி அன்று வழக்கு தொடர அனுமதித்து D.DIS2762/2020/S7/FSSAI ன் படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மாண்புமிகு கனம் நீதிமன்றத்தில் 19.10.2020 ம் தேதி வழக்கு தொடரப்பட்டது. அதன் அடிப்படையில் விசாரித்து தண்டனை வழங்க வேண்டி கேட்டு கொள்கிறேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.